1999 FeTNA/TNF Convention Souvenir Article

# அமெரிக்க நாட்டில் தமிழைக் காப்பாற்றவேண்டும்

* எழுத்தாளரின் வேண்டுகோளின்படி இக்கட்டுரையிலுள்ள பிழைகள் மலரின் ஆசிரியரால் திருத்தப்படவில்லை.

என் வாழ்க்கை வரலாறு

என் பெயர் செந்தில் குமார் சேரன். நான் 1978ல் அமெரிக்க நாட்டில் பிறந்தேன். இதே நாட்டில் நான் இருபது ஆண்டுகளாக வளர்ந்து வருகிறேன். என் பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்பவர்கள் என்பதால் ஒரு வயது முதல் பத்து வயது வரை நான் குழந்தைக்காப்பகத்தில் வளர்ந்தேன். சிறு வயதிலிருந்தே இரவு நேரங்கள், காலைப் புறப்படும் நேரங்கள், சனிக்கிழமைகள், ஞாயிற்றுக்கிழமைகள் ஆகிய நேரங்களிலும் மட்டும் என் பெற்றோரோடு பேசவும் விளையாடவும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இந்த அரிய வாய்ப்புகளின்போதுகூட என்னைக் கவனிக்க அம்மாவிற்கோ அப்பாவிற்கோ நேரம் இல்லை. அம்மாவிற்குச் சமையல் மற்றும் வீட்டு வேலை பொறுப்பு. அப்பாவிற்கு வரவுசெலவுக் கணக்கு மற்றும் பல்வேறு வீட்டு வேலை பொறுப்பு. ஆதலால் தொலைக்காட்சி பார்த்தல் என் பெரிய பொழுதுபோக்கு ஆகிவிட்டது. பணத்திற்காக அமெரிக்காவிற்கு வந்த என் பெற்றோர்கள் தங்கள் வேலையில் ஓயாமல் ஈடுபடவேண்டியிருக்கிறது. நிறைய விடுப்பு எடுக்காமல் உழைத்தால்தானே பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கும் அல்லவா? எனவே என் குடும்பம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தமிழ்நாட்டுக்குச் சென்று உறவினர்களைப் பார்ப்பது வழக்கம். இந்த ஒவ்வொரு முறையும் ஐந்தாறு வாரங்களுக்கு மேல் நீடிப்பதில்லை. பெற்றோருடன் சரியாகப் பேசவும் தமிழ்நாட்டில் நீண்ட காலம் தங்கவும் முடியாத இச்சூழலில் தமிழைக் கற்றுக்கொள்வது எப்படி? பல அமெரிக்கத் தமிழ்க் குடும்பங்களில் இத்தகைய சூழலைக் காண முடியும்.

1996 ஆம் ஆண்டு வரை என் தமிழறிவு மிகக் குறைவாக இருந்தது. எனக்குத் தமிழெழுத்துக்கள் தெரிந்ததே ஒழியே, தமிழைப் பேசவும், எழுதவும், படிக்கவும் தெரியவில்லை. திரைப்படம் பார்த்தால் முக்கால்வாசி வசனம் எனக்குப் புரியவில்லை. ஆனால், எனக்கு வாய்ந்தது ஆர்வம், தமிழையும் தமிழ்மொழி, பண்பாடு, வரலாறு ஆகியவற்றைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் ஆசை எனக்கு இருந்தது. என்னால் முடிந்த அளவுக்குச் சேர, சோழ, பாண்டிய வரலாற்றைத் தேடிப் படித்தேன். சிலப்பதிகார ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்துக் கதையைச் சுவைத்தேன். சங்ககால இலக்கியத்தின் ஐந்திணைகளைப் பற்றி அறிந்து அதன் சிறப்பால் வியந்தேன். அறிய அறியத் தமிழின் மேல் என் அக்கறை மிகுந்தது. 1996-ம் ஆண்டு அமெரிக்கத் தமிழ் மாநாட்டையொட்டி நான் வீட்டில் முதன் முதலாகத் தமிழில் பேச முயன்றேன். இக்கல்வியாண்டு முழுதும் நான் தமிழ்நாட்டில் தமிழைக் கற்றுக்கொண்டு வருகிறேன். நான் தமிழில் தேர்ச்சி பெற்றதாகக் கருதமுடியாது. என் தமிழ்த்திறனில் இன்னும் பல குறைபாடுகள் உள்ளன. எனினும் நீங்கள் படித்துக்கொண்டிருக்கிற கட்டுரையில் தொன்னூற்றைந்து விழுக்காட்டு எழுத்தை நான் சொந்தமாக எழுதியிருக்கிறேன் என்று குறிப்பிட விழைகிறேன்.

அமெரிக்காவில் தமிழின் இன்றைய நிலைமை

அமெரிக்காவில் நாளடைவில் தமிழ் சீர்கெடுகிறது. இந்நாட்டுத் தமிழிளைஞர்கள் பெரும்பான்மையோருக்குத் தமிழே தெரியாது. அவர்களுக்கு ஓரளவு தமிழ் தெரிந்தால் திரைப்படம் பார்த்தலும் திரைப்படப் பாடல் கேட்டலும் பரதநாட்டியம் ஆடலும் தமிழறிவின் பயன்பாட்டுக்கான வரையறை. மற்ற தமிழிளைஞர்களுடன் பேசவோ தமிழில் படிக்கவோ எழுதவோ முனைவதில்லை. ஆண்டுதோறும் தமிழ்நாட்டு அறக்கட்டளையும் அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் சேர்ந்து நடத்தும் தமிழ் மாநாடுகளில் தமிழில் உரையாடும் இளைஞர்கள் எத்தனை பேரைக் காணமுடிகிறது? ஒரு கையின் விரல்களினால் எண்ண முடியும் அளவு. அமெரிக்கத் தமிழ் மாநாடுகளின் இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகளில் தமிழின் நறுமணம் கமழ்வதும் இல்லை அதன் வாடைகூட வீசுவதில்லை. இரண்டாம் தலைமுறைத் தமிழர்கள் மத்தியில் உள்ள தமிழறியாமையைப் போக்கும் வழிமுறைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். தற்போதைய நிலைமையை மாற்றினால் தான் அமெரிக்க நாட்டின் எதிர்காலத்தில் தமிழுக்கு உயர்ப்பு இருக்கும்.

தமிழ்க்கல்வி

தமிழ்க்கல்வி இருவகைப்படும். அவற்றுள் மொழிக்கல்வி முதன்மையானது. தமிழைப் பேசவும், எழுதவும், படிக்கவும் தெரியவேண்டும். கேட்கும் தமிழைப் புரியவும் வேண்டும். இதற்கான பாடங்களை நடத்தும் தமிழ்ப்பெற்றோர்கள் அமெரிக்காவில் ஏராளம். ஆனால் தமிழை எப்படிச் சொல்லித்தரவேண்டும் என்ற பட்டறிவு இல்லாத ஆசிரியர்களால் இக்கல்வி செயல்படுவதால் பெரும்பாலான முயற்சிகள் சரியாகப் பலிப்பதில்லை. தமிழைக் கற்பிக்கும் முறைகளைப் பகிர்ந்துகொள்வதற்காக நாம் இணையம் (Internet) மூலமாக மின் அஞ்சல் (E-mail) தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் இணையப் பரப்பு (Website) ஒன்றை அமைக்கலாம்.

தமிழ்க்கல்வியின் இன்னொரு பிரிவு பொது அறிவு. தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் மரபு உண்டு. அமெரிக்க நாட்டு இரண்டாம் தலைமுறைத் தமிழிளைஞர்களுக்குத் தமிழ் மரபு தெரியுமா? சான்றாக நாம் பனைமரம் என்பதை எடுத்துக்கொள்வோம். பனை என்ற சொல்லுக்கு Palm மற்றும் Palmyrah என்ற ஈடான ஆங்கிலச் சொற்கள் உள்ளன. பனை மரம் என்றால் தென்கலிபோர்னியா (California), கடற்கரை, பாலை நிலம் மற்றும் நடுக்கடல் தீவு ஆகியவை அமெரிக்க மரபுப்படி நம் சாதாரண அமெரிக்கத் தமிழிளைஞர்களுக்குத் தோன்றக்கூடிய காட்சிகள். தமிழனுக்கோ பனையோலை, ஓலைச்சுவடி, கள், பதநீர், கருப்பட்டி, நுங்கு, மரம் ஏறுபவர்கள், பனைக்கிழங்கு ஆகியவை பனைமரம் என்ற சொல் நினைவுக்குக் கொண்டுவரக்கூடும். இப்படிப்பட்ட தமிழ் மரபின் சின்னங்களை நாம் அமெரிக்கத் தமிழிளைஞர்களுக்குக் கற்பிக்க வேண்டும். தமிழ் ஆட்ட வகைகள், விளையாட்டு வகைகள், மூவேந்தர் வரலாறு, இயல், இசை, நாடகம், இலக்கணம், விழாக்கள், பழக்க வழக்கங்கள், நாட்டுப்புற வாழ்க்கை முறை முதலிய தலைப்புகள் பொது அறிவுப் பட்டியலில் அடங்கும். தகவல்களைத் தொகுத்து எளிதான ஆங்கில நடையில் தெளிவான கட்டுரைகளை எழுதி வெளியிடவேண்டும். இணையப் பரப்பை உண்டாக்கிக்கொண்டு கட்டுரைகளும் உரிய புகைப்படங்களும், ஒலிகளும், ஒலிஒளிப் படங்களும் (Video) இடம்பெறலாம். அமெரிக்கத் தமிழர்கள் அல்லது தமிழ்நாட்டு அறிஞர்கள் கட்டுரைகள் எழுத அமெரிக்கத் தமிழிளைஞர்கள் அவற்றை மேம்படுத்தி இணையப் பரப்பில் சேர்க்கலாம்.

தமிழ்நாட்டு அறக்கட்டளையினரும் அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையினரும் இந்த முயற்சிகளுக்கு முழு ஆதரவு தரவேண்டும். தராவிட்டால் இவ்விரு அமைப்புகள் எதிர்காலத்தில் இருக்கா. ஆண்டுதோறும் ஏகப்பட்ட நேரத்தையும் பணத்தையும் செலவழித்து த.நா.அ. மற்றும் அ.த.ச.பே. தலைவர்களும், செயலாளர்களும், உறுப்பினர்களும் தமிழ் மாநாட்டை நடத்தி வருகிறார்கள். அவர்கள் செலவழிக்கும் பணத்திலும் நேரத்திலும் சிறிதளவாவது இளைஞர்களின் தமிழறிவை வளர்ப்பதற்காக ஒதுக்கி வைத்தால் போதும். பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும். திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களையும் தமிழறிஞர்களையும் கலைஞர்களையும் ஆவலாக அமெரிக்காவிற்கு அழைப்பவர்கள் தங்கள் குழந்தைகளின் தமிழ்க் கல்வியைப் பொருட்படுத்தாமல் இருப்பது கேவலமானதொரு மனப்பான்மை "வரவேற்கத்தக்க திட்டம்தான். ஆனால் ஒத்தாசை அளிக்க எனக்கு நேரம் இல்லை" என்று சொல்வது வெறும் சாக்கு மட்டும் அல்ல. அப்படிக் கூறுவது ஒருவரின் போலித்தனத்தை வெளிப்படுத்துவதாகும். உண்மையான தமிழன் தமிழின் சாவைத் தடுக்க ஓடிவருவான். சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டு சாக்கு சொல்லமாட்டான். தமிழார்வலர்களே! என்னை மின் அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். ஒருங்கிணைந்து திட்டங்களை மேற்சொன்னவாறு செயல்படுத்துவோம்.

கல்வித் திணிப்பு

அமெரிக்கத் தமிழிளைஞர்கள் தமிழையும் தமிழைப் பற்றியும் தெரிந்துகொள்வது நல்லது என்று எல்லாரும் ஒப்புக்கொள்வர். அமெரிக்கத் தமிழிளைஞர்களில் சிலரைச் சுட்டிக்காட்டி "இவர்கள் தமிழையும் தமிழைப் பற்றியும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தையோ பலர் மறுப்பார்கள்." "தமிழ்க்கல்வியைத் திணிக்க முடியாது" என்பார்கள். "நான் விருப்பப்பட்டால் தமிழைப் படிப்பேன். படிக்க வேண்டும் என்று சொல்வதற்கு நீ யார்?" என்று இளையவயதோர் சாடுவார்கள். இவை மறைமுகமாக அக்கறையின்மையைக் குறிக்கும் சொற்கள். தமிழ் அறிய ஆவல் உள்ளவர்கள் இப்படிப் பதில் அளிப்பமாட்டார்கள். பெற்றோர்கள்கூட இத்தகைய வசனங்கள் கொண்டு தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ் சொல்லிக் கொடுக்காமல் இருப்பதற்குச் சாக்காகப் பயன்படுத்துவார்கள். இந்த அறிவுகெட்ட கருத்தை முறியடிக்க வேண்டும். ஏறத்தாழ எல்லா அமெரிக்க மேல்நிலைப் பள்ளிகளிலும் அமெரிக்க வரலாறு என்பது கட்டாயப்பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இப்பாடத்தைக் கற்றுக்கொண்டு அதில் வரும் தகவல்கள் பெரும்பாலான தமிழிளைஞர்களுக்கு எந்த விதத்திலும் பயன்படப்போவதில்லை. இருந்தாலும் இந்தக் கட்டாயப்பாடத்தை எந்தத் தமிழ்ப் பெற்றோரோ தமிழிளைஞரோ கல்வித் திணிப்பாகக் கருதுவதில்லை. மாறாகத் தீவிர முயற்சிகளால் நம் இளைஞர்கள் அமெரிக்க வரலாற்றுப் பாடத்தில் சிறந்த மதிப்பெண்களைப் பெற முயல்கிறார்கள். ஆனால் இதே தமிழ் தெரியாத இளைஞர்களிடம் "இந்தப் பாடத்தில் காட்டும் அக்கறையை நீ தாய்மொழிக் கற்றலிலும் காட்டு" என்றால் கல்வித்திணிப்பு என்பார்கள். அதைவிட தெளிவானதோர் எடுத்துக்காட்டு பிறமொழிப் பாடமாகும். கிட்டத்தட்ட எல்லா மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பிறமொழிப் பாடம் பாடத்திட்டத்தில் இருக்கும். அதாவது, பட்டம் பெறுவதற்குப் பிறமொழி ஒன்றைக் கண்டிப்பாகப் படித்திருக்க வேண்டும். ஜெர்மன், பிரெஞ்சு, லத்தீன், ஸ்பானிஷ் ஆகிய பிறமொழிகளில் ஏதோ ஒன்றை நம் தமிழிளைஞர்கள் பெரும்பான்மையோர் படித்து வருகிறார்கள். தமிழை மட்டும் ஏன் கற்றுக்கொள்வதில்லை? சொந்தக்காரர்களுடன் சரியாகப் பேசமுடியாத தமிழிளைஞர்களுக்கு வேற்று பிறமொழிக்கல்வி தேவையா? நான் ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை ஜெர்மன் மொழி படித்தவன். இன்று வரை அக்கல்வி எனக்குப் பயன்படவேயில்லை. அந்த ஜெர்மன் மொழியைக் கற்றுக்கொள்ளும் நேரம் நான் தமிழ்க்கல்விக்கு அப்பொழுது பயன்படுத்தியிருந்தால் எனக்கு இன்று எவ்வளவோ தமிழ் தெரிந்திருக்கும். ஏதோ ஒரு பிறமொழி தெரிய வேண்டும் என்ற எண்ணத்துடன் பிறமொழிப்பாடம் பாடத்திட்டங்களில் இடம்பெறுகின்றது. பொதுவாக அது எந்த மொழியாக இருந்தாலும் சரி. ஆகவே தமிழில் தேர்ச்சி கொண்டவர்கள் அல்லது தமிழைக் கற்றுக்கொள்பவர்கள் மற்ற பிறமொழிகள் பள்ளியில் படிக்க வேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க நாட்டுக் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கல்வி (Liberal Arts Education) என்ற முறையை இளங்கலைப் (Undergraduate) பட்டப்படிப்புக்குப் பின்பற்றுகின்றன. இம்முறைப்படி மாணவர்கள் தங்கள் பட்டத்திற்குத் தேவையான பாடங்களுடன் பற்பல பாடங்கள் படிப்பார்கள். கிட்டத்தட்ட, பாதி பட்டத்திற்கான பாடங்களாகவும், பாதி பல்கலைப் பாடங்களாகவும் இருக்கிறது. சமூகவியல், அறிவியல், கணக்கு, வரலாறு, தத்துவம், (ஆங்கில) இலக்கியம், பிறமொழி போன்ற துறைகள் அனைத்திலும் ஓரிரு பல்கலைப்பாடங்களாவது கற்றுக்கொள்ள வேண்டும். பல்கலைக்கல்விக்கு இரு காரணங்கள் அளிக்கப்படும். ஒன்று, அறிவை விரிவாக்குவதற்கு வெவ்வேறு பாடங்களைப் படிக்கவேண்டும். பட்டம் தொடர்பான பாடங்களை மட்டும் படிப்பது கல்வியில் கிணற்றுத்தவளைத்தனமாகும். இரண்டு, பல்வேறு துறைகளைச் சேர்ந்தவற்றைச் சுவைத்துப் பார்த்தால்தான் பட்டத்திற்கு எந்தப் படிப்பைக் கைக்கொள்வது என முடிவெடுக்க முடியும். பல்கலைக்கல்வி சிறப்பான வழிமுறைதான். ஆனால் இவ்வழிமுறையை ஏற்றுக்கொண்டும் பட்டம் பெறும் தமிழிளைஞர்கள் ஏனோ தமிழ்க்கல்வியைப் புறக்கணிக்கிறார்கள்! பட்டப்படிப்பிற்கான பலவிதமான பல்கலைப்பாடங்களைக் கற்றுக்கொள்ளும்போது தாய்மொழியின் மேல் அக்கறையின்மை தெரிவிப்பது முறை அல்ல. மேலும் தமிழைப் பற்றிக் கொஞ்சம்கூட அறியாமலேயே இப்படிக் கூறுவது வருந்தத்தக்கது.

தமிழ்க் குழந்தைகள் இயல்பாகத் தமிழ், குடும்ப வரலாறு, மூதாதையர் வாழ்வுமுறை முதலியவற்றின் மேல் அக்கறை காட்டுவார்கள் என நம்புகிறேன். இடைப்பட்ட காலத்தில்தான் அந்த அக்கறைப் பொறி நெருப்பாக மூளாமல் தானே அணைகிறது. இதற்குச் சில காரணங்கள் உள்ளன. ஒன்று, மொழிக்கல்விக்கு நல்ல பாடநூல்கள் கிடையாது. தமிழைக் கற்றுக்கொள்ள விரும்பும் இளைஞர்கள் தரமற்ற பாடநூல்களினால் தங்கள் தமிழறிவை மேம்படுத்த முடியாததால் ஆர்வம் குறைகிறது. புதிய தமிழ்ப் பாடநூல் ஒன்றைப் பல்லூடகக் குறுந்தகடு (Multimedia CD-ROM) வடிவத்தில் எழுதுவேன் என்ற திட்டம் உண்டு. இருக்கிற பாடநூல்கள் குறித்து என் இணையப் பக்கத்தைப் பார்த்துத் தகவல் தெரிந்து கொள்ளலாம். (முகவரி: http://www.learntamil.com). அக்கறையின்மைக்குப் பெரிய காரணம் நம் தமிழ்ப் பெற்றோர்கள்தான். தமிழ்த்தீ மூட்டக்கூடிய பெற்றோர்கள் குழந்தைகளிடம் தமிழ் வலியுறுத்துவதேயில்லை. பள்ளியில் யவனக் (Greek) காவியங்கள் படிக்கும் இளைஞர்களிடம் பெற்றோர் சிலப்பதிகாரத்தை அறிமுகம் செய்ய வேண்டியதுதானே! உலக வரலாற்றைக் கற்றுக்கொள்ளும் இளைஞர்களிடம் மூவேந்தர் வரலாற்றைப் பற்றி ஒரு சொல்லாவது கூறவேண்டியதுதானே! யவனத் தத்துவஞானிகளின் பகுத்தறிவு கொள்கை படிக்கும் இளைஞர்களிடம் வள்ளுவரின் பொய்யா மொழியை விளக்கவேண்டியதுதானே! பெற்றோர்கள் அவ்வாறு செய்யாவிடுவதால் இளைய நெஞ்சுகளில் மலர வேண்டிய தமிழரும்புகள் பக்குவமின்றிப் பூக்காமல் உதிர்கின்றன. பொறுப்புணர்ச்சி, நாணயம், உழைப்பு முதலிய நல்ல குணங்களைப் புகட்டுவதைப் போல் தமிழையும் புகட்டவேண்டிய கடமை பெற்றோருக்கு உண்டு.

தமிழறியாமை குறித்து எவனும் பெருமைப்படுவதில்லை. ஆனால் தமிழ் தெரியாமல் போனதால் பலர் ஏங்குவதுண்டு. குழந்தைப் பருவத்தில் தமிழை அறவே கண்டுகொள்ளாத இளைஞர்களில் பலர் இளங்கலைப் பட்டப்படிப்பைத் துவங்கிய பின்னர் தமிழைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுவர். கல்லூரிச் சூழலும் அவ்வயது மனமுதிர்ச்சியும் இம்மாற்றத்தை ஏற்படுத்தும் இரு காரணங்களாகும். ஆனால், கல்லூரிப் பருவம் முதல் எல்லாரும் வெவ்வேறு பொறுப்புகள் புதிதாகச் சுமக்க வேண்டியிருப்பதால் நிறைய பேருக்குத் தமிழ் படிக்க நேரம் கிடைப்பதில்லையாம். இனிமேல் தமிழ் கற்றுக்கொள்வது எளிது அல்ல என்று உணர்ந்து, "நான் குழந்தையாக இருந்தபோது என் பெற்றோர் எனக்குத் தமிழ் புகட்டியிருந்திருக்க வேண்டும்." என்று சிலர் வருந்தி முனங்குவர். மற்ற தமிழிளைஞர்களுக்கு இந்நிலைமை ஏற்படாதபடி நாம் தமிழ்க்கல்விக்கான திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

அமெரிக்க நாட்டில் தமிழை வாழ வைப்போம்!

என் மின்னஞ்சல் முகவரி: webmaster@learntamil.com